செ.வெ.எண்.41 நாள்.18.04.2017.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிப் பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வீடுகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு.

--------

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிப் பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு, சுகாதாரப் பணிகள் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.04.2017) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

அம்பாசமுத்திரம் கன்னிவிநாயகர் கோவில் தெரு, மேலப்பாளையம் தெரு ஆகிய பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை பார்வையிட்டார்கள். மேலும், அங்கு பல்வேறு வீடுகளுக்கு சென்று கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கப்படுகிறதா என்பதையும், வீடுகளில் உள்ள தொட்டிகளில் நல்ல நீரில் முறையாக கொசு புழு ஒழிப்பு அபேட் மருந்து ஊற்றப்படுகிறதா என்பதையும், வீடுகளில் டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் பொதுமக்களிடம் கேட்டு அறிந்தார். தொடர்ந்து மேலப்பாளையம் பகுதியில் உள்ள ஆங்கில மாதிரி பள்ளியில் நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

தொடர்ந்து, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அய்யனார்குளம் பகுதியில், டெங்கு கொசு ஒழிப்பு பணிகளையும், சிறப்பு மருத்துவ முகாமினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் புளியங்குடி மற்றும் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தாக்கம் அதிகமாக உள்ளது. இப்பகுதி மட்டுமின்றி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அம்பாசமுத்திரம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது. மேலும், இப்பகுதியில் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணிகளையும், தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நல்ல நீரில் கொசு ஒழிப்பு மருந்து அபேட் திரவம் ஊற்றும் பணிகளையும் பார்வையிடப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் சித்த மருத்துவ பிரிவின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணிகளை தினசரி ஆய்வு செய்திட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விழிப்புணர்வு பணிகளை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து தீவிர கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொண்டு 15 தினங்களுக்குள் டெங்க கொசுகளை முழுமையாக அளிக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.ராம்கணேஷ், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் திருமதி.மாணிக்கத்தாய், நகராட்சிகளின் மண்டல இயக்குநர் திருமதி.பூங்கொடி அருமைகண், நகராட்சி ஆணையாளர்கள் (அம்பாசமுத்திரம்) திரு.பவுன்ராஜ், (விக்கிரசிங்கபுரம்) திரு.தாணுமூர்த்தி, சேரன்மகாதேவி ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியம், மாவட்ட சுகாதார கல்வி அலுவலர் திரு.அப்துல்காதர், அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் திரு.வெங்கட்ராமன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.